Registered No. M 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ ஆவணி௴ 15௳ 30—8—1948 ஹிஜ்ரி 1367 ஷவால்௴ 24௳ திங்கட்கிழமை. } இதழ் 31.

## இன்றைய சிக்கலான அரசியல் அறிவுக்கு ‘ஆஸாத்’ என் அவசியம்?

☆

பாகிஸ்தானின் உண்மையான சொரூபத்தை தீட்டிக்காட்டுவது ‘ஆஸாத்’

வெள்ளை ஏஜெண்டுகளான லீக் லீடர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவது ‘ஆஸாத்’

அவர்களுடைய வேற்றுமைப் பிரசாரத்தின் உதிரக்கடலில் மறைந்துவிட்ட ஒற்றுமை முத்துக்களைக் கண்டெடுப்பது ‘ஆஸாத்’

பாகிஸ்தானுக்கு ஓடி பரதவிப்போரின் துன்பங்களை சித்தரித்துக் காட்டி இந்தியாவில் இன்பமுடன் வாழச்செய்வது ‘ஆஸாத்’

அமைதி, சமாதானம், சகோதரத்துவம், முன்னேற்றத்திற்கு அவசியமான அறிவை ஊட்டுவது ‘ஆஸாத்’

முஸ்லிம்களை தவறான வழியிலிருந்து தடுத்து இஸ்லாமுக்கு உகந்த வகையில் காங்கிரஸோடு இணைப்பது ‘ஆஸாத்’

வெள்ளையர்களின் பொய்யான சரித்திரக் கூற்றுகளை அம்பலப்படுத்தி இந்தியாவின் உண்மையான உன்னத சரித்திரத்தை விளக்குவது ‘ஆஸாத்’

லீக் நடவடிக்கைகளால் ஏற்பட்டுவிட்ட வெறுப்பைப் போக்கி நல்லுணர்ச்சியை ஏற்படுத்துவது ‘ஆஸாத்’

நடந்தேறிய கலகங்களுக்கெல்லாம் ஒருசில லீக் லீடர்களே காரணமென்பதை எடுத்துக்காட்டி நிரபராதிகளான முஸ்லிம்களை நிரபராதிகள் என்று நிரூபித்துக் காட்டுவது ‘ஆஸாத்’

சுதந்திர இந்தியாவில் சுபிட்ச இந்தியாவை உருவாக்க இந்தியர்களைத் தட்டி எழுப்புவது ‘ஆஸாத்’

குறை எங்கிருப்பினும் தயவு தாட்சண்யமின்றி கண்டிப்பது ‘ஆஸாத்’

விவசாயிகள், தொழிலாளிகள், பாட்டாளிகள் ஆட்சியை லட்சியமாகக் கொண்டிருப்பது ‘ஆஸாத்’

வகுப்புவாத இருட்டறையில் சமதர்ம தீபத்தை ஏற்றிவைப்பது ‘ஆஸாத்’

தேசீய, சர்வதேசீய அரசியலை அலசி அரசியல் அறிவை துலக்குவது ‘ஆஸாத்’

# காஷ்மீர் எதிரியை விரட்டியபிறகே மூச்சு விடுவோம்

## உலகமே சொன்னாலும் பாகிஸ்தானில் சேரமாட்டோம்

ஸ்ரீநகர் 18 ஆக.

சுதந்திரதினத்தை யொட்டி நடந்ததொரு பொதுக்கூட்டத்தில் காஷ்மீர சிங்கம் ஷேக் அப்துல்லா கீழ்வருமாறு கர்ஜித்தார்:—

இந்தியா தன் துருப்புக்களை வாபஸ் பெற்று விட்டாலும் கூட நாம் காஷ்மீரிலிருந்து எதிரியை விரட்டியடித்த பிறகே நிம்மதியுடன் மூச்சு விடுவோம். காஷ்மீர் பாகிஸ்தானின் ஒரு பகுதியாவதை தடுப்பதற்காக ஒவ்வொரு காஷ்மீரியும் தன் உயிரை அர்ப்பணிப்பான். நான் பாகிஸ்தானுடன் சேரத்தயாராயிருப்பேனென்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்னுடைய சகோதரிகள் பாகிஸ்தான் பஜார்களில் விற்கப்பட்டனர். என்னுடைய குழந்தைகள் ஈவிரக்கமற்ற முறையில் கொலைசெய்யப்பட்டனர். தேசீய மஹாநாட்டைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சரி, வேறு எந்த காஷ்மீரியாக இருப்பினும் சரி நிரபராதிகளைக் கொன்று, கொள்ளையடித்து அவர்களுடைய பெண்மணிகளை மானபங்கப்படுத்திய பாகிஸ்தானுடன் சேரமாட்டான்

உலகம் பூராவுமே காஷ்மீர் கமிஷனாக மாறி காஷ்மீருக்கு வந்தாலும்கூட நாம் பாகிஸ்தானுடன் சேரத்தயாராயில்லை.

நம்முடைய இன்றைய பிரச்னைகளை இரண்டு வழிகளால் தீர்க்கமுடியும். முதலாவது பதில் நடவடிக்கை இரண்டாவது மகாத்மா காந்திஜி போதித்த சகோதரத்துவமும், சிநேகப்பான்மையும்

முதலாவது வழி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அனுஷ்டிக்கப்பட்டது. அதன் விளைவுகள் பார்த்தாய்விட்டன. நம்முடைய நன்மைக்காக பாபுஜி காட்டிய வழியில் நாம நடப்போம்

விரோதி நம் கதவுகளைத் தட்டிக்கொண்டிருந்த சமயத்தில் இந்தியத் தலைவர்கள் தங்களிஷ்டம் போல் நிபந்தனைகளை விதித்திருக்க முடியும். ஆனால் அவர்களுடைய ஜனநாயகப போக்கு அவர்களை அப்படிச் செய்ய அனுமதிக்கவில்லை. அப்படியிருந்தும் இந்தியாவுடன் சேர்ந்தது தவறு என்று யாராவது சொல்லும் பட்சத்தில் அவனுடைய முட்டாள் தனத்துக்காக நான் இரக்கப்படுகிறேன்.

முடிவில் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளும்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஷேக் அப்துல்லா புத்தி கூறினார்.

---

# ஷேக் அப்துல்லாவும், காஷ்மீர் பிரிவினையும்

ஐக்கிய நாட்டுக் காஷ்மீர் கமிஷனும் இந்தியா வந்து சேர்ந்தது பிரதமர் ஷேக் முகம்மது அப்துல்லா காஷ்மீர் பிரிவினையை ஆதரிப்பதாக வதந்திகளும் கிளம்பின. நாட்கள் செல்லச் செல்ல வதந்திகளும் வலுவடைந்து கொண்டே வந்தன. பாகிஸ்தான் சர்க்காரில் பொறுப்பு வாய்ந்த சிலரும் கூட காஷ்மீர் பிரிவினை பற்றிய எந்த யோஜனையையும் ஏற்க முடியாதென்று பேச ஆரம்பித்தனர். ஷேக் அப்துல்லா இரக்கப்பட்டு விடுதலை செய்த காஷ்மீர் போலி சுதந்திர சர்க்கார் தலைவரான சர்தார் இப்ராஹிமும் அவரது சகாவான குலாம் அப்பாஸும் பாகிஸ்தான் அடைந்து அப்துல்லாவுக்கும் அப்துல்லா சர்க்காருக்கும் எதிராக விஷத்தைக் கக்க ஆரம்பித்தனர். பாரபட்சமற்ற வாக்கெடுப்பின் மூலமோ அல்லது யுத்தத்தின் மூலமோதான் காஷ்மீர் பிரச்னைதீர முடியுமென்றும் பிரிவினைக்கு இணங்க முடியாதென்றும் தொண்டை கிழியப் பிரசாரம் செய்கின்றனர்.

இவ்விதப்பிரசாரத்திற்கு பலநோக்கங்கள் உண்டு.

1 உண்மையாகவே ஷேக் அப்துல்லா சார்பில் பிரிவினை யோஜனை சமர்ப்பிக்கப்பட்டதென்றும் ஆனால் அதை பாகிஸ்தான் நிராகரித்து விட்டதென்றும் உலகுக்கு அறிவிப்பது.

2. பொது ஜனவாக்கெடுப்பில் வெற்றிகிடைக்குமென்ற நம்பிக்கை பாகிஸ்தானுக்கு இல்லை. எனவே ஷேக் அப்துல்லாவே பிரிவினையை விரும்புகிறாரென்று சாடு கட்டிவிட்டு காஷ்மீர் பாகிஸ்தானுடனேயே சேருமென்று அப்துல்லாவே நம்புகையில் நாம் எதிர்த்து என்ன பிரயோஜனம் என்ற எண்ணத்தை உண்டாக்கி காஷ்மீர் மக்களின் உறுதியைக் குலைத்து பாகிஸ்தானுக்குச் சாதகமாக ஓட்டுக்களைப் பெறுவது.

3. காஷ்மீரை இரண்டாகப்பிரித்து ஒரு பகுதியை மஹாராஜாவிடம் ஒப்படைக்கவே ஷேக் அப்துல்லா விரும்புகிறாரென்று பிரசாரம் செய்வதன் மூலம் அப்பகுதியிலுள்ள முஸ்லிம்களை அப்துல்லாவுக்கு எதிராகத்துண்டுவது.

ஆயினும் பாகிஸ்தானிகளின் சூழ்ச்சி பலிக்க வில்லை காஷ்மீரிகளை வலையில்போட அவர்களால் முடியாமலேயே போய்விட்டது. தோல்வியடைந்த பாகிஸ்தானிகள், உடனே, காஷ்மீர் போலி சுதந்திர சர்க்காரிடம் தன்னுடைய ஆசாமிகளை அனுப்பியிருந் ததாகவும் பாகிஸ்தானை ஆதரித்தால் அதற்குப்பிரதிப் பிரயோசனமாக தனக்கு என்ன கிடைக்குமென்று ஷேக்அப்துல்லா கேட்டதாகவும் ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டனர். காஷ்மீர் சுதந்திரப்போராட்ட வீரரைகேவலப்படுத்த இதைவிட வேறென்னசொல்ல வேண்டும்! ஆனல் பாகிஸ்தானிகளுக்கு என்ன? தங்கள் காரிய சித்திக்காக எப்பேர்ப்பட்ட கேவல மான போக்கையும் மேற்கொள்வதில் அவர்கள் பின் வாங்குபவர்களல்ல.

இதன் நடுவே "சனுப் ஆற்றை இயற்கை எல்லை யாகக்கொண்டு காஷ்மீரை முஸ்லிம், முஸ்லிமல்லாதார் பகுதிகளாக பிரிக்க வேண்டும். இந்தயோஜனைக்கு இந்தியாவின்மேல் வட்டாரங்களின் ஆதரவும் இருந்து வருகிறது ஏனெனில் இந்தியாவில் பொறுப்புவாய்ந் தவர்கள் காஷ்மீர் போரை தோற்றுவிட்ட பந்தய மாகவே பாவிக்கின்றனர். காஷ்மீர் குன்றுகளில் பலியாகும் உயிர்களும், ஈடுபடுத்தப்பட்டிருக்கும் தளவாடங்களும், செலவாகும் பணமும் ஹைதரா பாத்துக்கு எதிராக உபயோகிக்கப் பட்டால் ஹை தராபாத்தை இந்திய யூனியனுடன் இணைக்க முடியு மென்று அவர்கள் அபிப்பிராயப் படுகிறனர்" என்று லாஹூரின் பிரபல பத்திரிகையும் பாகிஸ்தானில் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தின் பெரிய ஏஜெண்டுமான 'சிவில் அண்ட் மிலிடரி கெஜட்' என்ற பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறது.

'சிவில் அண்ட் மிலிடரி கெஜட்' டின் குறும் புத்தனம் காஷ்மீர் யுத்தத்தில் சாம்ராஜ்யவாதிகளுக் குள்ள பங்கையும் அவர்களுடைய நோக்கங்களையும் காஷ்மீர் நிலைமையில் திடீரென்று ஏற்பட்டிருக்கும் மாறுதலையுமே வெளிப்படுத்துகின்றது. நடக்கும் பிரசாரத்தைப் பார்த்தால் கூடிய சீக்கிரம் காஷ்மீரில் போர் ஓய்ந்து விடுமென்று பாகிஸ்தானுக்கு பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால்தான் பாகிஸ்தான் போர்முனை நடவடிக்கைகளை தீவிரப்படுத் தியிருப்பதுடன் தீவிரபிரசாரத்தையும் துடங்கியிருக் கிறது.

காஷ்மீரின் ஒரு பாகம் பாகிஸ்தானுடன் இணைக் கப்படுவதற்கு இந்தியா சம்மதிப்பதாகவும் ஆயினும் காஷ்மீர் பூராவையுமே தாங்கள் கேட்பதாகவும் முடிவில் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணையப்போவது நிச்சயமென்றும் பாகிஸ்தானிகள் பிரசாரம் செய்கின் றனர். காஷ்மீர் மக்கள், தேசிய மஹாநாட்டு ஊழியர் களிடையே தோல்வி மனப்பான்மையை யுண்டாக்கி பொது ஜனவாக்கெடுப்பில் தாங்களுக்கு எதிரான ஓட் டுக்களின் எண்ணிக்கையை கூடியவரையில் குறைப் பதே அவர்கள் நோக்கம்.

வாக்கெடுப்பின் மூலமோ அல்லது யுத்தத்தின் மூலமோதான் காஷ்மீர் பிரச்னை தீருமுடியுமென்று காஷ்மீர் போலிசுதந்திர சர்க்கார் பேர்வழிகள் செய் யும்பிரசாரம் பாகிஸ்தானிகளின் பிரசாரத்தை பலப் படுத்துவதில் அதிக பலனளிக்க முடியும்.

இன்னொரு பக்கம், "ஹைதராபாத் விஷயத்தில் அனுசரிக்கப்படும் போக்கையும் யூனியன் முஸ்லிம்கள் கண்மூடித்தனமாக கைது செய்யப்படுவதையும் பார்த்து காஷ்மீரிலுள்ள முஸ்லீம்கள் இந்தியசர்க் காரை சந்தேகிக்கின்றனர்" என்று பாகிஸ்தான் வட்டாரங்களின் பேசப்படுகிறது. ஒருபுரம் இந்திய சர்க்கார் முஸ்லிம்களுக்கு எதிரி என்று காஷ்மீர் முஸ் லிம்கள் நினைக்கும்படிச் செய்வதும் இன்னொருபுரம் ஹைதராபாத் விஷயத்தில் தன் போக்கை மாற்றிக் கொள்ளும்படி இந்தியசர்க்காரை நிர்ப்பந்திப்பதுமே இம்மாதிரி பிரசாரத்தின் நோக்கமாகும் பிரசாரம் பொய்யாக இருப்பினும் அபாயகாமான தென்பதை மறுப்பதற்கில்லை. இந்தியசர்க்கார் அதற்கு உடனடி யாக பதிலளித்தாகவேண்டும். ஹைதராபாத் பற்றிய உண்மையான தகவல்கள் காஷ்மீர் மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

அத்துடன் யூனியனில் முஸ்லிம்கள் கைது செய்யப்படும் விஷயத்தில் சற்று ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவேண்டியதும் அவசியம். அவசி யத்துக்கும் அதிகமான தீவிரத்துடன் கீழ்தர அதிகாரி கள் நடந்துகொள்ளுகின்றனர் என்பது வாஸ்தவந் தான். அதனல் அநேக சந்தர்ப்பங்களில் நிரபராதி களும் அவர்களுடைய கோபத்துக்கு இலக்காகி விடுகின்றனர்.

இன்று தேசத்துரோகிகளை ஒடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதைப்போலவே சர்க்கார்சட் டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடு பட்டிருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுத்தேயாகவேண்டும். ஆனல் ஆதாரமற்ற தகவல் கள், சந்தேகங்களின் பேரில் நடவடிக்கை எடுப்பது நியாயமற்றது மட்டுமின்றி புத்திசாலித்தன மற்றது மாகும். நம் எதிரிகள் பிரசாரம் செய்வதற்கு நாம் சந்தர்ப்பம் கொடுக்காமலிருக்க வேண்டியது அவசியம்.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 30—8—'48 திங்கட்கிழமை | இதழ் 31


## ஹைதராபாத்தின் சுதந்திரம்

ஆகஸ்ட் 15-ல் இந்தியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாம் முதலாவது சுதந்திர ஆண்டுவிழா நடந்தது. அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த இந்திய யூனியன் மக்கள் விழாவைக் கொண்டாடினர். டோக்ரா ஆட்சியிலிருந்து விமோசனம் கிடைத்ததைக் குறித்து காஷ்மீர் மக்களும் குதூகலித்தனர் பாகிஸ்தான் கூட தன்வாழ்நாட்களில் கழிந்து விட்ட ஒரு வருஷ நினைவைக்கொண்டாடியிருக்கிறது. பொதுவாக இந்திய உபகண்டமபூராவிலுமுள்ள மக்கள் மட்டுமின்றி உலகத்தின் பலவேறு பாகங்களில் வசிக்கும் இந்தியர்களனைவரும் பேரானந்தமடைந்தனர் ஆயினும் நம் சந்தோஷத்தில் பங்கெடுத்துக்கொள்ளக் கொடுத்து வைக்காத ஒரு பிரதேசமும் நாட்டின் நடுவே இருக்கத்தான் செய்தது இப்பேர்ப்பட்ட சரித்திரப் பூர்வமான சுபதினத்தில் துரதிர்ஷ்டம் பிடித்த ஹைதராபாத் சமஸ்தானம் மட்டும் உலகத்தை விட்டு தனியாக தன் விதியை எண்ணி பிரலாபித்துக் கொண்டிருந்தது. "ஹைதராபாத் இன்னும் விடுதலையடையவில்லை நம் தலைக்குமேல் துன்பமேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. நம் நாடும் விடுதலையடைந்த பிறகு மனம் விட்டு சந்தோஷம் கொண்டாடுவோம். ஆகையால் ஆகஸ்ட் 15-ந் தேதி ஹைதராபாத்தில் விடுமுறையில்லை" என்று பிரதமர் லாயிக் அலி அறிவித்தார் ஹைதராபாத்தில் துன்ப மேகங்கள் சூழ்ந்திருப்பதும் தாக்குப்பிடிக்க முடியாத கஷ்டங்களை ஹைதராபாத் எதிர்நோக்க வேண்டியிருப்பதும் வாஸ்தவமே ஆயினும் இந்த துன்பங்களெல்லாம் யாரால் ஏற்பட்டவை? என்பதே கேள்வி. இன்று சமஸ்தானமக்களை எதிர்நோக்கியிருக்கும் துன்பங்களுக்கெல்லாம் ஹைதராபாத் அதிகார வர்க்கம்தான் காரணமென்று லாயிக் அலிக்கு தெரியாமலில்லை. இந்திய சுதந்திரத்தில் மீர்லாயிக் அலிக்கும், ஹைதராபாத் யதேச்சாதிகார அதிகார வர்க்கத்துக்கும் சுதந்திரமில்லாமலிருக்கலாம். ஆயினும் இந்திய பொது மக்களிடமிருந்து ஹைதராபாத் பொதுமக்களைபிரிக்க அவரால் முடியாமல் போய்விட்டதைப் போலவே இந்திய சுதந்திரத்திலிருந்து ஹைதராபாத் சுதந்திரத்தையும் அவரால் பிரிக்கமுடியாது. ஹைதராபாத் இன்னும் சுதந்திரமடையவில்லையென்பது உண்மைதான். ஆனால் ஹைதராபாத் அடையப்போகும் சுதந்திரமும் மீர்லாயிக் அலிகனவு கண்டு கொண்டிருக்கும் சுதந்திரமும் ஒன்றல்ல. ஹைதராபாத் சுதந்திரமடைந்து மக்கள் மனம் விட்டு கொண்டாடப்போவதென்னமோ நிச்சயம். ஆனால் அந்த சுதந்திரம் சில ஜாகீர்தார்கள, விரல் விட்டு எண்ணி விடத்தக்க முதலாளிகள் அல்லது ஏதாவதொரு வம்சத்தினரின் சுதந்திரமாக இருக்கப்போவதில்லை. 175 லட்சம் மக்களின் சுதந்திரமாகவே யிருக்கும். அன்று மக்களின் ஹைதராபாத்தில் இன்றைய யதேச்சாதிகார அதிகாரவர்க்கத்தைப் பார்க்க முடியாது. இது லாயிக் அலிக்கு தெரிந்திருக்கவேண்டும். நாளாவட்டத்தில் ஹைதராபாத் அதிகார வர்க்கம் வழிக்கு வருமென்று நம்பினோம். விலகியிருந்து உயிர்வாழ முடியாதென்று உணர்ந்து தனியரசின் முட்டாள்தனமான ஆசையை விட்டு ஹைதராபாதின் நலனுக்காக இந்தியாவுடன் இணைந்து பங்காளியாக இருக்கும்படி விடுக்கப்பட்ட அழைப்பை கவுரவமாக ஏற்குமென்றும் நினைத்தோம். அதற்கு மாறாக அவர்கள் காலப்போக்கினால்கூட பாடம் கற்றுக்கொள்ளவில்லையென்றே தெரிகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் விவாதமும் அவர்களை விழிப்புறச் செய்யவில்லை. தங்கள் குறிப்பிட்ட நலன்களுக்காக சமஸ்தானத்தின் 175 லட்சம் மக்களையும் 400 லட்சம் இந்திய முஸ்லிம்களையும் பணயம் வைத்து ஆட அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். ஹைதராபாத் போக்கின் இந்த ஒரு அம்சத்தை மட்டும் இன்று தெளிவாக்க விரும்புகிறோம். காஷ்மீரைப்போலவே ஹைதராபாத் பிரச்னையும் வகுப்புவாதப் பிரச்னையல்லவென்பது வெளிப்படை. ஆனால் தன்னுடைய லட்சியம் வெற்றியடைவதற்காக சமஸ்தான அதிகார வர்க்கம் பிரச்னைக்கு வகுப்புவாத வர்ணம் தீட்டுவதில் முனைந்திருக்கிறது. அதில் ஓரளவுக்கு அவர்கள் வெற்றி அடைந்திருக்கின்றனரென்றே சொல்லவேண்டும் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஹைதராபாத் பிரச்னை ஹிந்து முஸ்லிம் தோரணையில் விவாதிக்கப்பட்டது. ஹைதராபாத் வகுப்பு வெறியர்களுக்கு இந்தியாவிலும் ஹிந்து மஹாசபை, சேவக் சங்கத்தைப் போன்ற நண்பர்கள் இருக்கின்றனர். அன்று வகுப்புவாத உதவியைக் கொண்டு மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தான் வாங்கியதைப் போலவே இன்று தக்காண ஜின்னாவான காஸிம் ரஸ்வி வகுப்பு வாதத்தை துணையாகக் கொண்டு தென்னிந்தியாவிலும் ஒரு பாகிஸ்தான் அமைக்க முயற்சிக்கின்றார். இந்திய டொமினியனில் வகுப்புப் பிரச்னை மோசமடைந்தால் தனக்குச் சாதகமென்பதும் ஹிந்து ஆதிக்கமென்று கூச்சல் போட்டு தனித்திருப்பதற்கு சர்வதேச ஆதரவு திரட்ட முடியுமென்பதும் ரஸ்விக்கு நன்றாகத் தெரியும். இந்தியாவில் வகுப்புக் கலவரங்களைத் தூண்டி விட்டு 400 லட்சம் இந்திய முஸ்லிம்களை பலியிட அவர் துணிந்திருப்பதற்கு அதுதான் காரணம். அதற்கேற்றவாறு இங்கு மஹாசபைக்காரர்களும் சேவக் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் முஸ்லிம்களின் விசுவாசத்தை சந்தேகிப்பதையே தொழிலாகக்கொண்டிருக்கின்றனர். தாய் நாட்டிடம்

விசுவாசமற்றவர்களுக்கு இந்தியாவில் இடமில்லையென்பதே நம் முடிவு ஆயினும் ஒரு வகுப்பைச் சேர்ந்த வகுப்பு வாதிகள் இன்னொரு வகுப்பைச் சேர்ந்த வகுப்புவாதிகளின் விசுவாசத்தை சந்தேகிப்பது நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களிடம் விசுவாசம் கோரப்படுகிறது. முஸ்லிம்களின் அறிக்கைகள் கூட சந்தேகிக்கப்படுகின்றன கீழ்தர வகுப்புவாத உத்தியோகஸ்தர்களால் முஸ்லிம்கள் அன்னிய ஏஜெண்டுகள், உளவாளிகள் என்று கைது செய்யப்படுகின்றனர். சில இடங்களில் வகுப்புக்கலவரங்களும் கூட தூண்டிவிடப்படுகின்றன. ''ஹைதராபாத் மீது இந்தியா படை எடுக்குமானால் நாட்டில் ஐந்து வருஷங்களுக்குப் பிறகும் வகுப்புக்கலவரங்கள் ஓயாது'' என்று மீர்லாயிக் அலி வெளியிட்ட அறிக்கையுடன் இதை ஒத்திட்டுப்பார்க்கையில் ஒரு பக்கம் வகுப்புக்கலவரங்களைக் காட்டி இந்திய சர்க்காரை பயமுறுத்தவும் இன்னொரு பக்கம் வகுப்புவாதத்தை தூண்டிவிடுவதற்காக ஹைதராபாத் ஏஜெண்டுகள் ஹிந்துமஹாசபை, சேவக் சங்கத்துடன் சேர்ந்து கூட்டு முன்னணி அமைத்திருப்பதும் நன்கு புலப்படுகின்றது. ஹைதராபாத் முஸ்லிம் வகுப்புவாதிகள், இங்குள்ள ஹிந்து வகுப்புவாதிகளின் கூட்டு முன்னணியைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவில் இதற்குமுன் மஹாசபைக்காரர்களும், லீகர்களும் பரஸ்பரவிரோதிகளாக வெளியில் காட்டிக்கொண்டாலும் அரசியல் பிரச்னைகளில் சட்டசபைகளில் ஒத்துழைத்தே வந்திருக்கின்றனர். வகுப்புவாதிகள் வகுப்புவாதிகளுடன் ஒத்துழைக்க முடியுமே யொழிய தேசியவாதிகளுடனல்ல. ஹைதராபாத்தில் வகுப்புவாதத்தை பலப்படுத்துவதன் மூலம் இந்தியாவில் தங்களை பலப்படுத்திக் கொண்டு சமயம் வரும்போது இந்தியாவில் ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க இந்தியாவிலுள்ள வகுப்புவாதிகள் திட்டமிட்டிருக்க மாட்டார்களென்று எப்படி நம்ப முடியும். எது எப்படியிருப்பினும் ஹைதராபாத்திலும் இந்திய டொமினியனிலுமுள்ள வகுப்பு வாதிகள் ஒன்று சேர்ந்து தேசியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் எதிராக கூட்டு முன்னணி அமைத்துக்கொண்டிருப்பது உண்மை. தங்களுடைய கீழ்தரமான லட்சியங்கள் வெற்றி பெறுவதற்காக ஹைதராபாத்திலுள்ள ஒன்றரை கோடி ஹிந்துக்களையும் இந்தியாவிலுள்ள நான்கு கோடி முஸ்லிம்களையும் பலியிட அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர். இந்நிலையில் ஹைதராபாத்திலுள்ள ஒரு யார் ஜங்க் அல்லது லாயிக் அலியின் முதலாளித்துவ, ஜமீன்தாரித்துவ சுரண்டலை நீடிப்பதற்காக தங்களை பலியிடாமலிருக்க வேண்டியது இந்திய முஸ்லிம்களின் கடமையாகும். இரண்டு நூற்றாண்டுகள் வரை போராடி பெற்ற சுதந்திரம் வகுப்புவாதிகளின் கையில் சிக்காமலிருக்க இன்னும் இரண்டாயிரம் வருஷங்கள் வேண்டுமானாலும் போராட முஸ்லிம்கள் சித்தமாயிருக்க வேண்டும் ஹைதராபாத் அதிகாரவர்க்கம் தன்போக்கைமாற்றிக் கொண்டு மக்களுக்கு சுதந்திரமளிக்க சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி ஏற்படுத்தா விட்டால் இந்திய முஸல்மான்கள் அதிக நாள் பொறுத்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். வகுப்புவாதிகளின் சவாலை முஸ்லிம்கள் ஏற்கவேண்டியிருக்கும். ஹைதராபாத்துக்கு புத்தி புகட்ட மற்றவர்களை விட இந்திய முஸ்லிம்கள் முன்னணியிலிருக்க வேண்டும். கடைசியாக இன்னும் நிலைமையை மோசமாக்காமல் திருந்தி வரும்படி ஹைதராபாத் அதிகாரவர்க்கத்தையும் அழைக்கிறோம்.

---

[ 3-ம பக்கத் தொடர்ச்சி. ]

காஷ்மீர் மக்கள் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே இருக்கின்றனர். எனவே யுத்தத்தை நிறுத்தி சீக்கிரமே பொதுஜனவாக்கெடுப்பு நடத்த வேண்டும். இல்லையேல் பாகிஸ்தான் போர்முனையில் பிரச்னையை தீர்த்துக்கொள்ளும் என்று கமிஷன் மெம்பர்களைத் தூண்டுவதேபாகிஸ்தான் பொய் பிரசாரத்தின் இறுதியான முக்கியமான லட்சியம். கமிஷன் ஏற்கனவே போரை நிறுத்தும்படி இரண்டு சர்க்கார்களுக்கும் யோஜனை கூறியுமிருக்கிறது.

பாதுகாப்பு கவுன்ஸில் ஆலோஜனைக் கிணங்க கமிஷன் சமாதானமான முறையில் பிரச்னைக்கு பரிகாரம் தேடுமென்பது வெளிப்படை ஆகையால் இருகரப்பு துருப்புக்களையும் வாபஸ் பெறும்படி உத்திரவிடவும் வாக்கெடுப்பு நடத்தவும் கமிஷனைத் தூண்டுவதில் பாகிஸ்தான் முழுமூச்சுடன் முனைந்திருக்கிறது.

சாதாரணகாலத்தில் இந்தியத்துருப்புக்கள் வாபஸாவதை யாரும் ஆட்சேபித்திருக்கமாட்டார்கள். அதிலும் எவ்வித நிர்ப்பந்தமுமின்றி பாரபட்சமற்ற முறையில் வாக்கெடுப்பு நடப்பதையே விரும்பும்போது வாபஸாக வேண்டியது நியாயந்தான். ஆனால் இன்றைய நிலைமை அதுவல்ல பத்து மாதங்களாக இந்தியத் துருப்புக்கள் காஷ்மீரில் போரிட்டு வருகின்றன, இதுவரை எதிரிகள் காஷ்மீரை விட்டு விரட்டப்படவில்லை. இந்நிலையில் இந்தியத்துருப்புக்கள் வாபஸாவது தோல்வியை ஒப்புக்கொள்வது போலாகும். அதனால் காஷ்மீர மக்கள் உற்சாகமிழந்து விடவும் கூடும். அத்துடன் இந்தியத்துருப்புக்கள் வாபஸான பிறகு ஏதாவது சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டு பாகிஸ்தான் துருப்புக்களும் மலை ஜாதி கொள்ளைக்காரர்களும் திரும்பவும் காஷ்மீர் மீது படையெடுக்க மாட்டார்கள் என்பதற்கு யார் உத்திரவாதமளிக்க முடியும்! அந்நிலையில் இந்தியத்துருப்புக்கள் திரும்பவும் காஷ்மீர் போவதும் எதிரிகளை தடுப்பதும் சிரமமாகப்போய்விடும். ஆகையால் போர்முனைகளில் ஈடுபட்டிருக்கும் இந்தியத் துருப்புக்கள் இந்தியாவின் ஏராளமான தளவாடங்கள் காஷ்மீர் யுத்த அரங்கத்தில் குவிந்து கிடக்கையில் வாபஸாவதென்பது இந்தியா காஷ்மீர் இரண்டுக்குமே தீமை செய்வதாகும். எனவே காஷ்மீரிலிருந்து துருப்புகளை வாபஸ் பெறுவதுபற்றிய எந்த யோஜனைக்கும் சம்மதிக்காமலிருக்க வேண்டியது இந்தியாவின் கடமை அத்துடன் காஷ்மீரிலிருந்து படையெடுப்பாளரை விரட்டியடிக்கும்வரை போர்நிறுத்த யோஜனையையும் ஏற்காமலிருக்க வேண்டும். காஷ்மீரின் ஒரு அங்குல நிலமும் பாகிஸ்தானுக்கு கிடைக்காமல் செய்வதற்கு அதுதான்வழியாகும்.

# — பாகிஸ்தான் பத்திரிகை உலகம். —

## பொதுஜன பாதுகாப்பு சட்டம்

பொதுஜன பாதுகாப்பு சட்டத்தை கொண்டு வரும்போது இந்தியா பாகிஸ்தானை மீண்டும் இணைக்க முயற்சிப்பவர்களுக்கும், புதிதாகப் பிறந்த பாகிஸ்தானுக்கு பாதகம் செய்பவர்களுக்கும், எதிராக மட்டுமே இச்சட்டம் பிரயோகிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. இதுவரை ஆயிரக்கணக்கானவர்கள் மேற்படி சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆயினும் இந்தியா பாகிஸ்தானை மீண்டும் இணைக்கும் முட்டாள்தனமான முயற்சி செய்ததாகவோ அல்லது பாகிஸ்தானுக்கு பாதகம் விளைவித்தாகவோ அவர்கள்மீது ஆதார பூர்வமாக குற்றம் சாட்ட முடியாமலேயே போய்விட்டது

இதுவரை பொதுஜன பாதுகாப்பு சட்டப் பிரயோகத்துக்கு இலக்கானவர்கள் எவர்?:—

1. சர்க்கார் அதிகாரிகளுடன் அபிப்பிராய பேதம் கொண்டிருப்பவர்கள்.

2. ஏதாவதொரு பிரதேச அதிகாரியின் ஆத்திரப் பார்வையில் அகப்பட்டுக்கொண்டவர்கள்

3. மந்திரிகளின் சீரிய வாழ்க்கையை சித்தரித்துக் காட்டியவர்கள்.

4 பதவிமோகம் பிடித்த அரசியல் வாதிகளின் கண்ணோட்டத்தில் முட்களாகக் கருதப்படும் சுயநலமற்ற தியாகிகள்.

5 பிரதேச அதிகாரிகளுக்கு வால் பிடிக்கும் கோஷ்டியில் சேராதவர்கள்

6 அரசியல் லீகுடன் ஒத்துழைக்காமலிருந்தவர்கள்

இவர்கள்தான்.

தான் கடவுளால்தான் நியமிக்கப்பட்டிருப்பதாக எண்ணும் ஒரு சாதாரண தாணக்காரனும் கூட பொதுஜன பாதுகாப்பு சட்டத்தை சுய பாதுகாப்புக்கான ஒரு ஆயுதமாக எண்ணுகிறான். இச்சட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் பெருந்தொல்லை இதுதான். அவன் யாரை வேண்டுமானாலும் சிறைக்குள் தள்ள முடியும். இதுவரை ஏராளமான வாலிபர்கள் விஜாரணைக்காக லாஹூர் கோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டனர். கடைசியில் அவர்களை விடுதலை செய்யவேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் ஆட்சியில் முஸ்லிமல்லாதாரின் அரசியல் கிளர்ச்சிகள் நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டிருந்த ஸி ஐ டி. வர்க்கம் இன்று நாடு விடுதலையடைந்து முஸ்லிமல்லாதார் இங்கிருந்து வெளியேறிவிட்டதால் தங்களுக்கு வேலையில்லாமல் போவதைப் பார்த்து தாங்களாகவே ஒரு வேலையைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் போலும். ஒரு சாதாரண போலீஸ்காரன் அல்லது ஸப் இன்ஸ்பெக்டரின் ரிப்போர்டின் பேரில் கௌரவமான பெரிய மனிதர்கள் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுடைய ரிபோர்டில்எவ்வளவு உண்மை? எவ்வளவுபொய்? என்று எப்பொழுதாகிலும் சிந்தித்ததுண்டா?

## ஸர்தார் ஷவுகத் ஹயாத்கானுக்கு புதிய பதவி

மந்திரி பதவியின் சீதோஷ்ண நிலை எப்பொழுதுமே ஸர்தார் ஷவுகத் ஷயாத்கானுக்கு ஒத்துக்கொண்டதில்லை. இன்று அவருக்கு லாலாயுத்ராஜின் பஞ்சாப் நேஷனல் பாங்கில் ஜெனரல் மானேஜர் உத்தியோகமும் மாதம் 3000 ரூபாய் சம்பளமும் கிடைத்திருப்பது திருப்தியளிக்கக்கூடிய விஷயம் தான்.

பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக லாலாயுத்ராஜ்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கையில் அவருடைய பாங்க் பாகிஸ்தானில் எதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது? என்று சில தினங்களுக்கு முன் மந்திரிசபை கட்சிப் பத்திரிகையொன்று இந்த பாங்குக்கு எதிராக காரசாரமாக எழுதிற்று. மேலும் அப்பத்திரிகை லாலாஜீயின் பாங்குடன் தொடர்பு கொண்டிருந்த முஸ்லிம்களை 'சமூகத் துரோகிகள்' 'பாகிஸ்தான் விரோதிகள்' என்றும் பத்வா கொடுத்திருந்தது. ஆனால் இன்று ஸர்தார் ஷவுகத்ஹயாத்கான் ஜெனரல் மானேஜராக நியமிக்கப்பட்ட பிறகு லாலாஜீயின் பாங்க் இஸ்லாமைத் தழுவிவிட்டது போலும்! எப்படியும் வீணாய் உட்கார்ந்துகொண்டிருந்த ஷவுகத் ஹயாத்துக்கும் மந்திரிகள் சம்பளத்துக்கு சமமான சம்பளமுள்ள ஒரு உத்தியோகமாகிலும் கிடைத்ததே!

## கான் குலாம் முகம்மத் கைது

கான் குலாம் முஹம்மத் கான் கைதியானதைக் குறித்து எல்லைப்புர பிரதமர் கான் அப்துல் கையூம்கானுக்கு நல்லாசியின் காணிக்கை சமர்ப்பிக்கின்றோம். கண்டனம் தெரிவிக்கும் காலம் மலையேறிவிட்டது. இனி பொதுமக்களுக்கு பிரதிநிதித்வம் வகித்து பேசுபவர்களையும் மந்திரிகளின் தான் தோன்றித்தனத்தை சுட்டிக் காட்டுபவர்களையும் அல்லது அவர்கள் ஆட்சியில் நாளுக்குநாள் சீர்கெட்டு வரும் மக்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பவர்களை

யும் உடனே பாகிஸ்தானின் எதிரிகள் என்று முடிவு செய்து மந்திரி தேவதைகள் சிறை கூடங்களுக்கு அனுப்பி வைக்கமுடியும்

"எல்லைப்புரத்தில் கான் அப்துல் கையூமுக்கு எதிராக வாய் திறப்பவர்களெல்லாம் பாகிஸ்தான் விரோதிகளென்று சிறையில் திணிக்கப்படுகின்றனர்" என 'இம்ரோஸ்' எழுதியது முற்றிலும் உண்மை.

கான் குலாம் முஹம்மது கைது குறித்து 'ஜமீந்தார்' கீழ்வருமாறு எழுதுகின்றது.

"எவ்வள அநியாயம்! என்னே அந்தகாரம்! என்ன அக்கிரமம்! மந்திரியின் அதிகாரங்களைக் கொண்டு தனிப்பட்ட வஞ்சம் தீர்த்துக் கொள்ளப்படுகின்றது? முஸ்லிம் லீக் ஆட்சியும்கூட முஸ்லிம் லீகர்களை சுதந்திரமாக இருக்கவிடுவதில்லை! அவர்கள் எங்கு போவார்கள்? கான் முஹம்மத் கானிடம் எல்லைப்புர பிரதமர் தனிப்பட்ட வஞ்சத்தை தீர்த்துக் கொண்டாரா? என்று கவர்னர் ஜெனரல் என்ற முறையில் விஜாரணை செய்யவேண்டும். இந்த அனியாயத்தை காய்தே ஆஜம் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். நம் குற்றச்சாட்டு உண்மையானல் மிஸ்டர் குர்ரோ மீது எடுக்கப்பட்டிருக்கும் அதே நடவடிக்கை கான் அப்துல் கையூம்கான் மீதும் எடுக்கப்பட வேண்டும்."

ஆயினும் மீண்டும் ஒரு முறை கான் அப்துல் கையூம் கானுக்கு நல்லாசியின் காணிக்கை சமர்ப்பிக்கின்றோம்.

## செஞ்சட்டையினருக்கு 1,50,000 அபராதம்

பிஷாவர் ஆக. 17

சஹார் சத்தாவில் கிளர்ச்சியைத் தூண்டியதாக குற்றம்சாட்டி கான் அப்துல் கையூம்கானின் எல்லைப்புர சர்க்கார் செஞ்சட்டைத் தலைவர் ஸர்தார் அமீன் ஜான்கானை கைது செய்திருக்கிறது மேலும் கையூம் கான் சர்க்கார் சஹார் சத்தா போலீஸ் எல்லைக்குள்ளிருக்கும் செஞ்சட்டையினருக்கு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் அபராதமும் விதித்திருக்கிறது. இந்த தொகை அங்கு நியமிக்கப்பட்டிருக்கும் தண்டப்போலீஸுக்காக செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சஹார்சத்தா, பார்பரா, பரால் முதலிய இடங்களில் யாரும் வீடுகளை விட்டு வெளிவரக்கூடாதென்று நடமாட்டத்தடை உத்திரவும் போடப்பட்டிருக்கிறது கூட்டங்கள், ஊர்வலங்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன சஹார் சத்தாவில் செஞ்சட்டையினர்மீது கையூம்கான் சர்க்கார் நடத்திய தடியடி பிரயோகத்தால் பலத்தஉயிர்ச்சேதம்ஏற்பட்டிருக்கிறது அதனல் பட்டாணியர்கள் கொந்தளிப்படைந்துள்ளனர். சஹார்சத்தா தடியடி பிரயோகத்தைப் பட்டாணியர்கள் வெள்ளையர் ஆட்சியில் நடந்த 'கிஸ்ஸா கானி பஜார்' படுகொலையுடன் ஒப்பிடுகின்றனர்.

## பாபுஜி மேற்கொண்டிருந்த நிலை

—( A. M. அல்லா பிச்சை )—

மத்திய ஐக்கிய முன்னேற்ற கமிட்டி மெம்பர் ஜனப் A M அல்லா பிச்சை கீழ்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

தன் நாட்டு மக்களான ஹிந்து முஸ்லிம்கள் வகுப்பு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர வேண்டுமென்பதற்காகவே நம் அருமை பாபூஜி ஆத்மாவை அர்ப்பணித்தார். நம் மாபெரும் தலைவர்களான பண்டிட்ஜி, ராஜாஜி, சர்தார்ஜியும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி நமக்கு தெளிவாக சொல்லியிருக்கின்றனர் ஒருவனை ஒருவன் எதிர்த்து நிற்கும் இரண்டு சகோதரர்களை ஒன்றுசேர்க்க முயற்சிக்கும் ஒரு நல்ல சகோதரனுடைய நிலையை இன்று காங்கிரஸ் முஸ்லிம் மேற்கொண்டிருக்கின்றான். இருவரில் யாரையாவது ஒருவனை கொல்லத் துணிவானென்று அவனிடம் எதிர்பார்க்க முடியாது இருவரில் யாராவது ஒருவருக்கு தீங்கு செய்வதைவிட அவன் வேண்டுமானல்தான் தன்உயிரை அர்ப்பணிப்பான். நம் அருமை பாபூஜி மேற்கொண்டிருந்த நிலை இதுதான் இன்று பண்டிட்ஜியும் ராஜாஜியும் சர்தார்ஜியும் அதே நிலையை மேற்கொண்டிருக்கின்றனர். சந்தோஷகரமான முன்னேற்றமுள்ள கௌரவமான சுபிட்ச இந்தியாவை பார்க்கவிரும்பினல் நாமும் அதேநிலையை மேற்கொள்ள வேண்டும்.

இந்திய யூனியனில் முஸ்லிம்களுக்கு எதிராக ஏதோ ஒருவிதமான சந்தேகம் நிலவி வருகின்றது. ஹிந்து சகோதரர்கள் முஸ்லிம்களை நம்பவேண்டும். லீகர்களில் எவனவது தாய்நாட்டுக்கு தீமை செய்வதாக நிரூபிக்கப்பட்டால் ஒரு துரோகியைப்போல் அவன் சாகட்டும். சந்தேகத்தின் காரணமாக நம் அரசியல் எதிரிகளிடம் அவர்களை ஒப்படைத்து விடுவது சரியல்ல.

முஸ்லிம்களை நாம் காங்கிரஸுடன் இணைக்க வேண்டும். அரசியல் எதிரிகள் நம் ஸ்தாபனத்துக்கு எதிராக தூண்டிவிடும் வகையில் நாம் அவர்களை உதாசீனம் செய்துவிட முடியாது. முஸ்லிம் லீக் நீடித்திருப்பதால் முஸ்லிம்களுக்கு நன்மையில்லை. அதற்கு மாறாக முஸ்லிம்களுக்கும் காங்கிரஸுக்கும் எதிரான நாட்டிலுள்ள சக்திகளுக்கு அதுபலத்தையே கொடுத்திருக்கின்றது நிதான புத்தியுடன் சிந்தித்துப் பார்த்து முஸ்லிம் லீகை கலைப்பதற்கு முன்வரும்படி லீக் தலைவர் ஜனப் முகம்மது இஸ்மாயிலை நான் கேட்டுக்கொள்கிறேன் வகுப்புவாத அடிப்படையிலுள்ள அரசியல் ஸ்தாபனங்களை நாட்டின் நலனுக்கு புறம்பானவையென்று சர்க்கார் கருதினல் தைரியமாக முன்வந்து உடனடியாக அவைகளை தடை செய்ய வேண்டியது அவசியம்.

# —: சுதந்திரத்தின் லட்சியம் :—

நாம் விடுதலைக்காக போராடுகையில் சிறைக் கூடங்களில் இருண்ட அறைகளிலும்கூட ஹிந்து முஸ்லிம் சகோதரத்துவம் நிலவியிருந்தது. அன்று வசிச்சுமையால் ஒடுங்கி, குறுகிவாடியமுகம், உலர்ந்து ஒட்டிய வயிறு, குழிவிழுந்த கண்களுடன் முக்கால் நிர்வாணிகளாக இருந்த கோடிக்கணக்கான இந்திய நடைப்பிணங்கள் நம் கண்முன் காட்சியளித்தன. பட்டினியாலும், ஆண்களைவிட அதிக உழைப்பாலும் பெண்மையின் இயற்கையான வசீகரத்தையும் இழந்த பெண்கள் காட்டுமிராண்டிகளைப்போல் பெற்றெடுக்கப்பட்ட எழுத்தறிவற்ற குழந்தைகள் கால்வயிற்றுக் கூழுக்கு காலமெல்லாம் உழைத்து கூரைகிழிந்த குடிசைகளில் வெய்யிலிலும், மழையிலும், குளிரிலும், காய்ந்து, நனைந்து நடுங்கி நிமோனியாவால் பீடிக்கப்பட்டு தவித்த கோடிக்கணக்கான மக்கள் நம் கவனத்தைக் கவர்ந்திருந்தனர் சுகாதார வசதியின்றி, நீட்டிப்படுக்க இடமுமின்றி கோழிகள் போல் கூட்டில் அடைபட்டுக்கிடந்த தொழிலாளர்கள் வேறு இருந்தனர்.

“நம் அனுதாபம் உங்களுக்கே உரித்தாகும். உங்களுக்காகவே உழைக்கின்றோம். உங்கள் வெற்றியே எங்கள் வெற்றி குறுகிய பொருளாதார எல்லையை விஸ்தரிப்போம். உங்கள் உதிரத்தை அட்டைபோல் உறிஞ்சும் முதலாளித்துவத்துக்கு முடிவுகட்டுவோம். தேசத்தின் செல்வத்தை தேசமக்களுக்கு பொதுவாக்குவோம்” என்று நாம் அவர்களுக்கு உறுதியளித்தோம்.

பல வருஷங்கள் வரை போராடி ‘ஜாலியன் வாலாபாக்’ ‘கிஸ்ஸா கானிபஜார்’ போன்ற அநேக படுகொலை சம்பவங்களை மக்கள் சகித்தபிறகு நம் லட்சியத்தை சமீபித்தோம். வெற்றியும் லட்சிய சித்தியும் நம்கால்களை முத்தமிடும் தருவாயிலிருந்தன. கடைசி நேரத்தில் சாம்ராஜ்ய சக்திகள் சூழ்ச்சி செய்தன முதலாளிகளும் ஜாகீர்தார் கும்பல்களும் அதனுடன் ஒத்துழைத்தனர்.

திடீரென்று இந்திய அரசியல் அரங்கத்தில்வகுப்புவாத பூதத்தை தோற்றுவித்தனர். ‘ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி சமுதாயங்கள்” இருவருக்கும் தனித்தனி நாடுகள் தேவை” “ஹிந்து இந்தியா முஸ்லிம் இந்தியாவென இந்தியாவை இரண்டாகப் பிரிக்கவேண்டும்.” என்று சாம்ராஜ்ய நடிகர்கள் அரசியல் சுதியில் ஆலாபனைசெய்ய ஆரம்பித்தனர். அவர்களுடைய கூச்சல் இந்தியர்களின் காதுகளை செவிடாக்கி சிந்தனையிலிருந்த சகுதி அனைத்தையும் பறித்துக்கொண்டு வகுப்புவாத கோஷங்கள் மட்டும் இடம் பெறச்செய்து விட்டது தங்களுடைய கோஷங்கள் ஒருக்கால் வெற்றியடையாமல் போய் விடுமோ வென்ற சந்தேகம் ஏற்பட்டவுடன் கல்கத்தா நவகாளி, பீஹார், குர்முக் தேஸ்வர், பஞ்சாப் படுகொலைகளின் இரத்த இன்செக்ஷன் செய்தனர். காட்டுமிராண்டித்தனமும் மிருகத்தனமும் நிர்வாணமாய் கூத்தாடத்துடங்கிற்று. அதனால் இந்தியப் பிரிவினையை எதிர்த்துவந்த சிலமூளைகளும்கூட நாட்டின் அமைதியைக் காக்க பிரிவினை அவசியமென்று நினைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. துரதிர்ஷ்டவசமாக பிரிவினை இன்னும் அதிகமான அழிவுக்கே அடிகோலிற்று. அன்று தாற்காலீகமாக ஏற்பட்டிருந்த வகுப்புவாதம் இன்று இந்திய சமுதாயத்தின் உடற்கூறில் இடம் பெற்று விட்டது.

நடந்தேறிய பயங்கர ரத்தக்களரியில் நாம் அழிவுற்றதும், இழந்ததும் நமக்காகத்தானா? அல்லது மற்றவர்களின் கையில் ஆயுதமாக உபயோகிக்கப் பட்டோமோ? என்பதுதான் சிந்தனைக்குறிய விஷயமாகும். சில தினங்களுக்கு முன் கலவரப்பிரதேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்த பண்டித சுந்தர்லாலின் கீழ்வரும் அறிக்கை அதை தெளிவாக்குகின்றது.

“பல்வேறு இடங்களில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்களால் உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படவிருந்த ஆயுதங்கள் தோட்டாக்கள் வெடிமருந்துக்களின் பெரும் பகுதிபொறுப்புவாய்ந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் மூலம் கிடைத்ததென்பதை ஒருநடுநிலைமை நீதிஸ்தலத்தின் முன் நிரூபிப்பதில் எவ்விதக் கஷ்டமும் இருக்காதென்பதே என் அபிப்பிராயம்.”

“லையால்பூரிலிருந்து கர்னல் பென்ஞ் என்ற ஆங்கிலேய அதிகாரியை மாற்றிவிட்டால் பிறகு ஒரு ஹிந்துவோ அல்லது சீக்கியனோ கொள்ளையிடப்பட மாட்டானென்று லையால்பூர் டெபுடி கமிஷனாக இருந்த முஸ்லிம் ஒருவர் ஜில்லாபோர்டு தலைவராக இருந்த ஒரு ஹிந்து நண்பரிடம் கூறினார்.”

“ராவல் பிண்டியில் மார்ச்சுமாதத்தில் நடந்த கலவரங்களுக்கெல்லாம் டெபுடி கமிஷனராகவும் ஹோம் செக்ரடரியாகவும் இருந்த ஆங்கிலேயர்கள் தான் காரணமென்று ராவல்பிண்டியிலுள்ள கிட்டத்தட்ட எல்லா ஹிந்து முஸ்லிம் பிரமுகர்களுமே அபிப்பிராயப்பட்டனர்.”

“ சிறுபான்மையோரை துன்புறுத்தக் கூடாதென கிழக்குப் பஞ்சாபிலுள்ள ஒரு ஜில்லாவில்

ஹிந்துக்கள் முடிவுசெய்துவிட்டதைப் பார்த்து மீண்டும் கலவரத்தீயை மூட்டுவதற்காக ஆங்கிலேய ராணுவ அதிகாரி ஒருவன் நெடுந்தூரம் மோட்டாரில் பிரயாணம் செய்து வழியில் கண்டவர்களை எல்லாம் சுட்டுத்தள்ளிக் கொண்டே போனான்."

" இன்னொரு ஜில்லாவில் ஒரு வகுப்பினர் அருகாமையிலிருந்த ராணுவ முகாமின் உதவியை நாடினர். நாட்டின் நிர்வாகத்தை மீண்டும் பிரிட்டிஷ் சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளும்படியும் விண்ணப்பத்தில்சாத்தியமான அளவுக்கு இந்தியர்களின் கையெழுத்துக்களை வாங்கும்படியும் அங்கிருந்த ஆங்கிலேயக்கமாண்டர் அவர்களுக்கு யோஜனை கூறினான். விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு கையெழுத்துக்களும் வாங்கப்பட்டன. பிறகு அந்த யோஜனை கைவிடப்பட்டது.

இம்மாதிரியான உதாரணங்களை ஏராளமாக எடுத்துக்காட்ட முடியும். இன்னும் மோசமான உதாரணங்களும் இருக்கின்றன. தங்களிடமிருந்த சாதனங்களையும் சந்தர்ப்பத்தையும் கலகத்தை மூட்டுவதற்காக மட்டுமின்றி பரப்புவதற்கும் நீடித்து நடத்துவதற்கும் பொறுப்புவாய்ந்த பிரிட்டிஷ் பத்திரிகைகளையும் உபயோகித்திருக்கின்றனர்."

மேற்கூறிய அறிக்கையைப் பார்த்தால் நாம் மற்றவர்களின் கையாயுதமாக இருந்து அழிவுற்றோமென்பது வெளிப்படை.

1939 முதல் 1945 வரை யுத்தத்தில் பின்வாங்கிய சக்திகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டு வாபஸாகும் பொசுக்கல் கொள்கையையே அனுஷ்டித்து வந்தன. வாபஸாகும்போது எதிரி பிரயோஜனப்படுத்திக்கொள்ள முடியாமல் செய்வதற்காக தங்களுடைய நகரங்களை தாங்களே பொசுக்கிவிடுவது வழக்கமாக இருந்தது. இந்தியாவிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் அதே கொள்கையை அனுஷ்டித்தனர் போலும். ஆனால் தங்களுடைய நகரங்களுக்குப் பதிலாக நம்முடைய நகரங்களை நம்முடைய கைகளாலேயே அழிக்கும்படிச் செய்திருக்கின்றனர்.

கலவரங்களின் நரகம் ஜில்லிட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன. ஆயினும்இதுவரை சிந்தனையில் நிதானம் ஏற்படவில்லை. புரட்சிக்குப் பிறகு பல புதிய பிரச்னைகள் எழுவது இயற்கை. அதிலும் குறிப்பாக நூற்றுக்கணக்கான சமஸ்தானாதிபதிகள், ஆயிரக்கணக்கான ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், முதலாளிகள், தொழிற்சாலைக்காரர்கள், ரொக்க லேவாதேவிக்காரர்கள் இருக்கக்கூடிய இந்தியா போன்றதொரு தேசத்தில் இன்று அநேக அரசியல் பிரச்னைகள் நம்மை எதிர்நோக்குவதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் கடந்த கால சம்பவங்களால் ஏற்பட்டிருக்கும் விஷமயமான சூழ்நிலையில் கலப்படமற்ற அரசியல் பிரச்னைகளும் வகுப்புவாத பிரச்னைகளாக மாறுவதுதான் துரதிர்ஷ்டம்.

காஷ்மீர் கலப்படமற்ற ஒரு அரசியல் பிரச்னையாகும். அங்கு தாக்குபவர்களும் எதிர்த்து நிற்பவர்களும் முஸ்லிம்களேயாவர். அதுகூட வகுப்புவாத பிரச்னையாகிவிட்டது.

ஹைதராபாத் பிரச்னை ஒரு சமஸ்தானத்தின் யதேச்சாதிகாரப்போக்கு பற்றிய அரசியல் பிரச்னையாகும். அதற்கும் வகுப்புவாத வர்ணம் தீட்டப்படுகின்றது. ஜோத்பூர் ரயில்வே பிரச்னை முற்றிலும் கொடுக்கல் வாங்கல் பிரச்னையாகும். அதில் பாகிஸ்தான் சூழ்ச்சி செய்தது அதற்காக அந்த ரயில்வேயிலுள்ள சிப்பந்திகள் நீக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்றைய நிலைமையில் பெரும் பொறுப்பு பத்திரிகைகளைச் சார்ந்ததாகும். ஆத்திரமூட்டும் வகையில் செய்திகளை மிகைப்படுத்தி பிரசுரிப்பதைவிட்டு வாசகர்கள் சிந்தனையில் நிதானத்தை ஏற்படுத்தி நிர்மாண வழியில் தேசத்தை முன்னேற்றி இந்தியாவின் புதிய அரசியல் வெற்றியடையும்படிச் செய்வது பத்திரிகைகளின் கடமையாகும். அநேக பத்திரிகைகளின் போக்கைக் கண்டு வருந்தாமலிருப்பதற்கில்லை. வகுப்புவாத முதலாளித்துவ பிற்போக்கு வாதிகளின் ஆயுதமாக இன்று பத்திரிகைகள் உபயோகிக்கப்படுகின்றன. 1947 ஆகஸ்ட் 15-க்கு முன்னால் மக்களிடையே செல்வாக்கு பெற்று தேசிய பத்திரிகைகளாக இருந்த அநேக ஆங்கில உர்து பத்திரிகைகளை இன்று முதலாளிகள் விலைக்கு வாங்கிக் கொண்டிருப்பதைக் குறித்து என்னதான் வருந்தினாலும் குறைவுதான். இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் பிரசங்கத்திலும்கூட அவர்கள் தங்களுக்கு சாதகமான பகுதிமட்டுமே பி சுரிக்கின்றனர். காபினெட் அங்கத்தினர்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய பெயரால் பொய்யான அறிக்கை பத்திரிகையில் பிரசுரமாகும். பிரசங்கத்தில் பேசப்படுவது ஒன்று; பத்திரிகையில் கொடுக்கப்படும் தலைப்பு இன்னொன்று.

இவ்வித பயங்கர நிலைமையில் விடுதலைக்காகப் போராடிய சிப்பாய்களும் ஏழைகளுக்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்த வீரர்களும்கூட காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைந்த பிறகு அறவே மாறிவிட்டதுதான் எல்லாவற்றையும்விட வருந்தத்தக்க விஷயமாகும். அவர்களுடைய நோக்கங்கள் மாறிவிட்டன. எண்ணங்கள் மாறுதலடைந்துவிட்டன. நாட்டின் வறுமையைப் போக்கி ஏழைகள், தொழி

லாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் அவர்களுக்குக் கவலையே இல்லைபோல் தெரிகிறது. பதவிமோகத்துக்காகத் தங்கள் தியாகங்களை எல்லாம் தியாகம் செய்து விட்டவர்கள் அநேகர். காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைவதற்கு முன் லஞ்சம், கள்ள மார்க்கெட்டின் பரம சத்ருக்களாயிருந்தவர்களின் கைகளே இன்று பொதுமக்களின் ரத்தத்தால் சிவந்து காணப்படுகின்றன. கள்ளமார்க்கெட், லஞ்சம் முதலிய காரியங்களில் கூட்டாளிகளின் கடமையை நிறைவேற்றி வருகின்றனர்.

வெட்கப்படத் தகுந்த மேற்கூறியவிதமான தொத்துநோய்களால் பீடிக்கப்பட்ட நாம் லட்சியத்தை மறந்தோம். அன்று தடியடிபட்டு, சிறை புகுந்து, துப்பாக்கிக் குண்டுகளை மார்பில் தாங்கி, தூக்குக்கயிற்றை முத்தமிட்டு போக்குவதற்காகப் பாடுபட்ட அதே ஊழல்களில் இன்று நாமே சிக்கி விட்டோம். எங்கு நிற்கிறோம். எத்திசையை நோக்கிச் செல்லுகிறோமென்று உணர்ந்து விழிப்படையவேண்டியது நம் கடமை.

சுதந்திர முதலாண்டு விழாவைக் கொண்டாடி இரண்டாவது சுதந்திர ஆண்டைத் துடங்கும் இத்தருவாயில் அடிமைத்தளைகளை அறுத்தெறிய நமக்கு ஆர்வமூட்டிய லட்சியங்களை எண்ணிப் பார்ப்பது நன்மை பயக்கும். உண்ண உணவின்றி, உடுத்த துணியின்றி அல்லலுறும் மக்களுக்காக ஏதாவது செய்தோமா? தொழிலாளர் வர்க்கம் முன்னேற திட்டங்களை உருவாக்கி அமுலாக்கினோமா? விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர வழி செய்தோமா? கள்ள மார்க்கெட்டை ஒழித்தோமா? லஞ்சத்தை எதிர்த்துப் போராடினோமா? பொது மக்கள் முன்னேற்றமே நம் லட்சியம்; அதை அலட்சியம் செய்வது நம் லட்சியத்தை நாமே குலைப்பதுபோலாகும்.

பூரண சுதந்திரத்திற்கு முன்பே அதாவது இடைக்கால சர்க்கார் ஏற்பட்டபோதே நம் தலை சிறந்த தலைவர் இந்தியப்பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆசியப் புனருத்தாரணத்திற்கு அடிகோலினர். 1947 மார்ச்சில் எல்லா ஆசியநாட்டுப் பிரதிநிதிகளையும் டில்லி பழைய கோட்டையில் ஒன்று திரட்டி ஆசிய பெடரேஷன் ஏற்படுவதற்கு ஏற்றதொரு சூழ்நிலை ஏற்படுத்தியிருந்தார். அவருடைய உயரிய லட்சியம் சித்தி பெற நாம் செய்ததென்ன? உத்தேச ஆசிய பெடரேஷன் ஐரோப்பிய சுயநல ஆதிக்கத்திலிருந்து ஆசியாவை விடுவிப்பது மட்டுமின்றி உலக சமாதானத்துக்கும் அமைதிக்கும் உத்தரவாதமளிக்கவும் முடியும்.

இன்று சுயநலத்துக்கு இலக்காகி நிதான புத்தியை இழந்து விட்ட ஐரோப்பிய சக்திகளின் சிக்கல் தீர முடியாத நிலைமையை அடைந்திருக்கிறது. நேசப்பான்மையின் நேர்வழி ஆதிக்க வேட்டையில் அடர்ந்த காடுகளில் மறைந்துவிட்டது. இந்நிலையில் பலம் வாய்ந்த ஆசியாவே அவர்களுக்கு நேர்வழியைக் காட்ட முடியும். அணுகுண்டு அழிவினின்றும் உலகுக்கு விமோசன மளிக்க முடியும்.

பிரிக்கப்பட்ட பிறகும் இந்தியா ஆசியாவிலேயே பெரிய நாடாக விளங்குகிறது. நிர்மாணத்துறையில் சுருசுருப்பாய் முன்னேறினால் ஆசியாவுக்கு தலைமை தாங்கும் கவுரவத்தை இந்தியா பெறமுடியும்.

சிந்தனைகளை செப்பனிட வேண்டியது நம்கடமை. சுதந்திரம் கிடைத்திருப்பினும் லட்சியம்கைகூடவில்லையென்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. அதற்காக விடுதலைபெற உழைத்ததைவிட புதிகஆர்வத்துடனும் உறுதியுடனும் உழைத்தாக வேண்டும். அன்று அன்னிய சக்திகளை எதிர்த்தோம். இன்று உள் நாட்டில் பிற்போக்கு சக்திகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

பண்டிதநேரு கூட்டிய ஆசிய நாடுகள் உறவு மஹாநாட்டில் நம் அருமைத் தந்தை மஹாத்மா காந்திஜி பேசிய கீழ்வரும் வார்த்தைகளை நாம் மறப்பது துரதிர்ஷ்டமாகும். "அனுபமிக்க பிரதிநிதிகளே! டில்லியின் அழகையும் மஹாநாட்டின் சிறப்பையும் பார்த்து இந்தியாவை ஒரு சுபிட்ச நாடு என்று நீங்கள் தவறாக எண்ணிவிட வேண்டாம். "இந்தியா" வென்பது ஒரு நேரம் பட்டினிகிடக்க வேண்டிய நிலைமையிலிருக்கும் பலகோடிமக்கள் வசிக்கக்கூடிய லட்சக்கணக்கான கிராமங்களின் பெயரேயாகும்."

—:—


## ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது
உங்கள் தேசியக் கடமை.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

# "பாதுஷாகான்"

சென்ற வாரத் தொடர்ச்சி.

தேச விடுதலையை விரும்பிய குற்றத்துக்காக குஜராத், ஹஜாரீபாத் முதலிய சிறைகளில் அநேக வருஷங்கள் அடைபட்டு கிடந்தது மட்டுமின்றி பாதுஷாகான் எல்லைப்புரத்திலிருந்து பிரஷ்டமும் செய்யப்பட்டிருந்தார். 1934-ல் ஹஜாரிபாக் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட பிறகு எல்லைப்புர பஞ்சாப் மாகாணங்களில் பிரவேசிக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டார். 1937-ல் எல்லைப்புரத்தில் குதாயி கித்மத்கார்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகே எல்லைப்புரத்திற்குச் செல்ல முடிந்தது.

## இந்தியாவை விட்டு வெளியேறு

காங்கிரஸின் 1942-போராட்டம் தேச விடுதலையின் இரண்டாவது பெரிய போராட்டமாகும் அதில் பாதுஷாகான் தலைமையின்கீழ் குதாயிகித்மத்கார்கள் காட்டிய வீரம் அவர்களுக்கே உரித்தாகும். இந்தியாவை விட்டு வெளியேறு போராட்டத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் பாதுஷாகானை கைதுசெய்தது மட்டுமின்றி மிருகத்தனமாக அடித்து அவருடைய இரண்டு விலா எலும்புகளையும் ஒடித்துவிட்டது. 1945-லும் குதாயிகித்மத்கார்கள் சாம்ராஜ்ய ஏஜண்டுகளை தோற்கடித்து தங்கள் ஆட்சியை அமைத்தனர் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப்பதவியை ஏற்குமாறு பன்முறை அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். "நான் ஒரு சிப்பாயாக இருந்து வேலைசெய்வதிலேயே பெருமையும், சந்தோஷமும் கொள்கிறேன்' என்று சொல்லி ஒவ்வொரு தடவையும் பாதுஷாகான் மறுத்து வந்திருக்கிறார்.

1947-ல் பிரிட்டிஷ் ஏஜெண்டுகள் ஐ ஸி எஸ். அதிகாரிகளுடன் லீகர்கள் சேர்ந்து சூழ்ச்சி செய்து சிவில் சட்டமறுப்பு நாடகத்தை நடத்தி எல்லைப்புரத்தில் வீடுகளைவிட்டு வெளிவர முடியாதநிலைமையைஏற்படுத்தி ஹிந்துசீக்கியர்கள் உணவின்றிபட்டினி கிடக்கும்படி செய்து விட்டனர். அச்சமயம் பீஹாரில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக பாதுஷாகான் உழைத்துக்கொண்டிருந்தார். மதத்தின் பெயரால் ஒரு பிரிவினருக்கு இழைக்கப்படும் தீங்கை எண்ணி மனம் வெதும்பினர். சாத்தியமான சகல துறைகளிலும் ஹிந்து சீக்கிய சகோதரர்களுக்கு உதவி செய்ய முன்வருவதன் மூலம் குதாயி கித்மத்கார்களென்றதங்கள் நற்பெயரை நிலைநாட்டுமாறு பாதுஷாகான் கேட்டுக்கொண்டார். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பெஷாவரிலும் சுற்றுப்புறங்களிலும் சென்று ஹிந்து சீக்கியர்களுக்கு உதவினர்.

## பிரிவினைக்குப் பிறகு

ஆங்கிலேய விஷமத்தால் இந்தியா, பாகிஸ்தான் டொமினியன்களில் மதத்தின் பெயரால் கொலைபாதகச் செயல்கள் ஆரம்பித்தன. இரண்டு டொமினியன்களிலும் லட்சக்கணக்கான ஹிந்துக்கள் முஸ்லிம்கள், சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். ஆயினும் பாதுஷாகானின் குதாயி கித்மத்கார்கள் மாதக்கணக்கில் இரவு நேரங்களிலும் தூங்காமல் தங்கள் தேசீய சகோதரர்களை பாதுகாக்க பாரா கொடுத்து வந்த பெருமை எல்லைப்புரத்துக்குத்தான் உண்டு இன்றைக்கும் எல்லைப்புர ஹிந்து, சீக்கியர்கள் இந்தியன் என்று சொல்லிக்கொள்ளுவதற்குப் பதிலாகபட்டாணியன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகின்றனர். "பட்டாணியர்களின் ஆட்சி எல்லைப்புரத்தில் அமைந்தால் நமக்கு அபாயமிருக்காது நாம் திரும்பவும் அங்கு செல்வோம்." என்றும் சொல்லுகின்றனர். இந்தியப்பிரிவினையின்போது இதர சமூகத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமானதென்று நிரூபித்துக் காட்டிய சமூகம் ஒன்று உண்டென்றால் அவர்கள் பட்டாணியர்களே ஆவர். தங்கள் தேசீய சகோதரர்களான ஹிந்து சீக்கியர்களின் பரிபூரண நம்பிக்கையை பெற்றிப்பதாக பெருமிதத்துடன் தலையை நிமிர்த்தி சொல்லக்கூடிய உரிமை அவர்களுக்குத்தான் உண்டு இந்தியா பாகிஸ்தான் இரண்டிலுமுள்ள இதரசமூகத்தினர் இதர மதத்தினரின் நம்பிக்கையை பெற்றிருப்பதாக சொல்லிக்கொள்ள உரிமையில்லை.

## பட்டாணிஸ்தான் எழுச்சி

சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் எப்பொழுதும் காட்சியளித்து வந்த வீரனும் அவனது சமூகமும் சுதந்திர வீரர்களை விட்டு பிரிந்திருப்பது மட்டுமின்றி முன்னைவிட அதிகமாக அடிமைத்தளைகளில் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். இதைவிட வருந்தத்தக்க விஷயம் வேறு உண்டா? பாதுஷாகான் எப்பொழுதுமே பட்டாணியர்களின் சுதந்திரத்துக்கும் ஐக்கிய இந்திய விடுதலைக்கும் உழைத்துள்ளார். இந்திய சுதந்திரத்துடன் கூடவே பிரிவினையும் பிரகடனம் செய்யப்பட்டது. அப்படியானால் பட்டாணிஸ்தான் பெயரால் பட்டாணியர்களின் ஆட்சியும் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற பழைய கோரிக்கையை பாதுஷாகான் விடுத்தார். ஆங்கிலேயர்கள் பட்டாணியர்களை முதல்தர எதிரிகளாக பாவித்தனர். ஆகையால் பட்டாணிஸ்தான் ஏற்பட

# பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு

லாஹூரிலுள்ள பிரபல மௌலானா ஒருவருக்கு ஜமீயத் தலைவர் மௌலானா ஹபீபுர் ரஹ்மான் எழுதிய கடிதத்தின் விபரம்.

பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி அமையவேண்டுமென்று சில பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்து வரும் கிளர்ச்சியைக்கண்டு முஸ்லிமல்லாதார் பீதியுறுகின்றனர். நம் தனி நபர்களின் அல்லது சமூகத்தின் சமீப காலப் போக்கைப்பார்த்து இஸ்லாமிய ஆட்சி யென்றால் இப்படித்தான் இருக்குமோ வென்று நினைப்பதே அதற்குக் காரணம்.

நீண்ட நாட்களாகவே இஸ்லாமின் பெயரால் இஸ்லாமின் பெயரைக் கெடுக்கும் போக்கை நாம் மேற் கொண்டிருந்தோம் பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகாவது இஸ்லாமிய விதிகள் கொஞ்சமேனும் கவுரவிக்கப் பட்டிருக்குமாயின் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிமல்லாதார் முஸ்லிம்களை விட அதிக கவுரவத்துடன் பாகிஸ்தானிலேயே இருந்திருப்பர். பாகிஸ்தானில் நமக்கிருக்கும் சுகமும் சுபிட்சமும் நம் ஆட்சியிலும் இருக்க முடியாதென்று அவர்கள் உலகுக்கு அறிவித்திருப்பர். அதனால் இஸ்லாமின் கீர்த்தி உலகில் ஓங்கியிருக்க முடியும். நான் புதிதாக ஆச்சரியப்படத்தக்கதொன்றும் எழுதவில்லை. கலிபாக்களிலேயே மிகவும் மோசமாக நடந்து கொண்டவர்கள் காலத்திலும் கூட முஸ்லிமல்லாதார் தங்கள் ஆட்சியைவிட இஸ்லாமிய ஆட்சியில் அதிக சுதந்திரத்துடன் தாங்கள் இருந்துவருவதாக அறிவித்திருப்பதை நாம் சரித்திரத்தில் பார்க்கிறோம்.

பாகிஸ்தான் பொதமக்களும் சர்க்காரும்செய்தப்பெருந்தவறால் முஸ்லிமல்லாதார் பாகிஸ்தானில் இருக்க முடியாமல் போனது இஸ்லாமின் பிரகாசமான முகத்தில் ஏற்பட்டுவிட்ட விகாரமான வடுவாகும். முஸ்லிமல்லாதாரின் உயிர்: உடமை கவுரவத்தைப் பாதுகாப்பது இஸ்லாமிய ஆட்சியின்கடமை பாகிஸ்தான் பொதுமக்களும் உலமாக்களும் இஸ்லாமிய ஆட்சியைவிரும்புவது உண்மையாயின் வெளியேறிவிட்ட முஸ்லிமல்லாதார் அனைவரையும் மீண்டும் பாகிஸ்தானில் அழைத்து அவர்களுடைய உயிர், உடமை, கவுரவம் மதம் முதலியவைகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமென்று உறுதிகூறி முஸ்லிம்களால் அவர்களுக்கு நேர்ந்துவிட்ட நஷ்டங்களுக்கு ஈடுசெய்து அவர்களிடம் மன்னிப்புக்கோரி கவுரவமாய் குடியேற்றவேண்டியதவசியம்.

வெளியிலுள்ள முஸ்லிம்களுக்கு தீங்கிழைக்கப் பட்டால் அதற்கு பதில் இஸ்லாமிய ஆட்சியிலுள்ள முஸ்லிமல்லாதார் மீது பழிதீர்த்துக்கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. துரோகம் செய்பவர்களுக்குமட்டுமே துரோகிகளுக்குரிய தண்டனை கொடுக்கப்படவேண்டுமே யொழிய எல்லா முஸ்லிமல்லாதருக்குமல்ல முஸ்லிமல்லாத யாராவது ஒருவன் மசூதியை அகவுரவித்தால் அதற்குப் பதில் முஸ்லிமல்லாதாரின் வணக்கஸ்தலம் அகவுரவிக்கப்படுவதை திரு குர்-ஆன் அனுமதிக்கின்றதா! இல்லை ஒருக்காலுமில்லை அதற்கு மாறாக எச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்ல்லாதாரின் வணக்க ஸ்தலங்கள் கவுரவிக்கப் படவேண்டுமென்றே வற்புறுத்துகின்றது.

அன்பரே! பாகிஸ்தானில் முஸ்லிமல்லாதாருக்கு நேர்ந்த துன்பம் கொஞ்சமாயினும், அதிகமாயினும் அதற்காக உலமாக்கள் வருந்தவேண்டாம். அவர்களை மீண்டும் குடியேற்ற முயற்சிக்கவேண்டும் அதுவரை முஸ்லிம்கள் தங்கள் தவறை ஒப்புக்

---

முடியாத சூழ்நிலையை உண்டாக்கி விட்டனர். அதனால் பாதுஷாகானும் அவரது பட்டாணியர்களும் இந்தியா பாகிஸ்தான் விடுதலையின்போது சுதந்திரத்தைக் கொண்டாடவில்லை அதற்கு மாறாக 1947-செப்டம்பரில் காபூலிலிருந்து வெளிவரும் 'இஸ்லாஹ்' என்னும் பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கையின் மூலம்பாதுஷாகான் கீழ்வருமாறு உறுதி கூறினார்.

"பாகிஸ்தானுக்குள் பட்டாணிஸ்தான் பெயரால் பட்டாணியர்களின் சுதந்திர ஆட்சியை ஏற்படுத்திய பிறகே நிம்மதியடைவேன். என்னுடைய உடலில் கடைசி துளி ரத்தம் இருக்கும் வரையிலும் அதற்காக உழைப்பேன்."

இன்று இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் கொண்டாடுகின்றன் ஆனால் பாதுஷாகானும் குதாயி கித்மத்கார்களும் விடுதலையை விரும்பும் ஒரே குற்றத்துக்காக இன்று சிறை கூடங்களில் அடைப்பட்டுக் கிடக்கின்றனர். இந்தியா பாகிஸ்தான் விடுதலைப் போராட்டத்தில் பட்டாணியர்கள் இரண்டுக்கும் உதவியிருக்கின்றனர். ஆயினும் பட்டாணிஸ்தான் விடுதலைப் போராட்ட அரங்கத்தில் நிராயுதபாணிகளான பட்டாணியர்கள் தன்னந் தனியே நிற்கின்றனர். அவர்களுக்கு இந்தியா, ஆப்கனிஸ்தானம், ரஷ்யா எங்கிருந்தும் உதவி கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல் பாகிஸ்தானில் வேலைசெய்கின்றது பாகிஸ்தான் பெயரால் பட்டாணியர்கள்மீது வஞ்சம்தீர்த்துக்கொண்டு வருகின்றது.

கொண்டு முஸ்லிமல்லாதாரை அவரவர்களின் வீடுகளில் மீண்டும் குடியேற்ற மாட்டார்களோ அதுவரை இஸ்லாம் இந்தியாவில் வளர்ச்சியடைய முடியாது.

அன்பரே! இன்று யூதர்களுடன் அரபியர்கள் போர்செய்து வருகின்றனர். ஆயினும் கெய்ரோ (எகிப்து) விலிருக்கும் யூதர்களில் ஒருவருக்கேனும் தொந்திரவு ஏற்பட்டதாக நீங்கள் பத்திரிகைகளில் பார்த்ததுண்டா? இல்லை. எகிப்து முஸ்லிம் தங்களிடமுள்ள முஸ்லிமல்லாதாரின் உரிமைகளை பரிபூரணமாக உணர்ந்திருப்பதே அதற்குக் காரணம்.

அன்பரே! பகாவல்பூரில் கலகம் மூண்டவுடன் "இது ஜிஹாத் (புனித யுத்தம்) அல்ல. கலகமே எந்த முஸ்லிமல்லாதாரின் உயிர், உடமை கவுரவத்துக்கும் தீங்குசெய்வது பாவம்" என்று ஜமீயதுல் உலமாவைச் சேர்ந்த மௌலானா குலாம் முஹம்மத் சாஹிப் பத்வா வெளியிட்டார். பாகிஸ்தானிலுள்ள எல்லா உலமாக்களும் அம்மாதிரி பத்வாக்களை வெளியிட்டு லட்சக்கணக்கில் அச்சிட்டுவினியோகித்திருந்தால்....!

டில்லியிலுள்ள பெரிய மௌலானா ஒருவரிடம் கேட்கப்பட்டபோது "இது ஜிஹாதுமல்ல; சமூகங்களிடையே நடக்கும் யுத்தமுமல்ல. கலகமேயாகும் ஏனெனில் ஒருசமூகத்தினர் இன்னொரு சமூகத்தினருக்கு தீங்குசெய்த அதேசமயத்தில் அந்த சமூகத்தைச்சேர்ந்த அநேகர் பாதிக்கப்பட்ட சமூகத்தினரைக் காப்பாற்றுவதற்காக தங்கள் உயிரை அர்ப்பணித்துமிருக்கின்றனர். அவர்களைக் குறித்து ஒவ்வொரு சமூகத்தினரும் பெருமை படுவதுடன் காப்பாற்றப்பட்டவர்கள் பரஸ்பரம் நன்றியும் தெரிவித்துக்கொள்கின்றனர்." என்று பத்வா அளித்தார்.

"ஹிந்துக்களையாகிலும் சகித்துக்கொண்டிருக்க முடியும். ஆனால் சீக்கியர்களை சகித்துக்கொண்டிருக்க முடியாது" என்று பாகிஸ்தானில் சொல்லப்படுவதாக நான் கேள்விப்படுவது உண்மையாயின் அதைவிட வருந்தத்தக்கபெருந்தவறு வேறொன்றுமிருக்க முடியாது. பாகிஸ்தானில் தங்களுக்கு உதவிய முஸ்லிம்களைப் பாராட்டிப் புகழ்ந்து பேசும் ஆயிரக்கணக்கான சீக்கியர்களை நான் சந்தித்திருக்கிறேன். இன்றைக்கும் அவர்கள் பாகிஸ்தானிலுள்ள தங்கள் உபகாரிகளுடன் கடிதப்போக்குவரத்து மூலம் தொடர்பு கொண்டிருக்கின்றனர். அதைப்போலவே கிழக்குப் பஞ்சாபில் முஸ்லிம்களையும் முஸ்லிம் பெண்மணிகளையும் காப்பாற்றிய ஆயிரக்கணக்கான சீக்கியர்களை நானறிவேன். தன் உயிரைப் பணயம்வைத்து முஸ்லிம்களைக் காப்பாற்றிய பாபு பசன்சிங் ஒருவரே இதற்குப்போதும். பாபு பசன்சிங் மட்டும் கிழக்கு பாஞ்சாலப் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தால் கிழக்கு பாஞ்சாலத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேறியிருக்க மாட்டார்களென்பதே என் அபிப்பிராயம்.

அன்பரே! நடந்தது வகுப்புக்கலவரமுமல்ல. சமூக, சமுதாயப் புரட்சியுமல்ல. கலகங்களின் அடிப்படையில் வெள்ளையர்களின் சுயநலம் வேலை செய்துகொண்டிருந்தது. காலப்போக்கு எல்லாவற்றையும் அம்பலப்படுத்தும். அப்பொழுது நாம் ஏன்? எதற்காக! கலகம் செய்தோமென்று வெட்கப்படுவோம்.

உங்களைப்போன்ற உலமாக்கள் உண்மையான இஸ்லாமைஎடுத்துக்காட்டி இஸ்லாமென்றால் 'அமைதி' என்று முஸ்லிமல்லாதார் தெரிந்து கொள்ளும்படிச் செய்யவேண்டுமென்பதற்காகவே இதை எழுதுகிறேன். பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு அங்குள்ளமுஸ்லிமல்லாதார் பாகிஸ்தானில் தங்களுக்கு இருக்கும் சுகமும் சுதந்திரமும் வேறு ஆட்சியில் இருக்க முடியாதென்று அறிவிப்பார்களென்றே நம்பியிருந்தேன் என்னுடைய ஆசையில் மண் விழுந்துவிட்டது.

அன்பரே! இஸ்லாமின் கவுரவமும் கீர்த்தியுமே நம் லட்சியமாக இருக்கமுடியும். நாலரைக்கோடி இந்திய முஸ்லிம்கள் கவுரவமாய் வாழ்வதைப்பார்க்க விரும்பினால் உடனடியாக மேற்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய முஸ்லிமல்லாதாரை பாகிஸ்தான் பொதுமக்களும் அரசாங்கமும் கெஞ்சிக் கூத்தாடி திரும்ப அழைத்து கண்ணியமாய் குடியேற்ற வேண்டும். லட்சக்கணக்கான முஸ்லிமல்லாதார் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல விரும்புகின்றனர். அமைதியுடன் சுகமாய் வாழ அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டால் அவர்கள் விசுவாசமாய் இருப்பார்களென்பது நிச்சயம்.

## இரண்டாயிரம் செஞ்சட்டையினருக்கு சிறைவாசம்.

பிஷாவர் ஆக. 18

அநேக செஞ்சட்டைத் தலைவர்கள் ஆப்கன் எல்லைக்குள் சென்றுவிட்டனர். பிஷாவரில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செஞ்சட்டையினர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் ராணுவம் செய்த துப்பாக்கிப்பிரயோகத்தால் 300-க்குமேல் செஞ்சட்டையினர் இறந்தும் 500-க்குமேல் காயமடைந்துமிருக்கின்றனர். கூட்டத்தை கலைப்பதற்காக பாகிஸ்தான் படைகள் கைக்குண்டுகளை உபயோகித்தனர். அத்மான் ஜய்யிலிருக்கும் கான் சாஹிப் வீட்டில் பாகிஸ்தான் ராணுவம் முகாம் போட்டிருக்கிறது. செஞ்சட்டையினர் காபூலுக்கு போய் சேர்ந்திருப்பதைப் பற்றி பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு பெரும் கவலை ஏற்பட்டிருக்கிறது. காபூல் பத்திரிகைகள் பாகிஸ்தான் அரசாங்கத்தின் பேரில் கோபத்தையும் வெறுப்பையும் காட்டி எழுதுகின்றன.

# வளரும் ஜனநாயகம்-5

—( தாராசு )—

ஒரு தேசத்தில் ஜனநாயக லட்சியம் எவ்வளவு தூரம் கைகூடியிருக்கிறதென்று அறிய வேண்டுமானால், வோட்டுரிமையின் அதிகப்படி எண்ணிக்கையும், அதை மக்கள் உபயோகப்படுத்தும் நிலையைப் பொறுத்துத்தான் லட்சியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். ஜனநாயக முறைப்படி திட்டமாக வேலை செய்வதற்கு, வாக்காளர்கள் — அபேட்சகர்கள் ஆகிய இவர்களுடைய தாராதரங்களை நிர்ணயிப்பது அவசியம் என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். ஒரு தேசத்தில் ஏராளமான பேர் வாக்குரிமையைப் பெற்றிருந்தபோதிலும், எல்லோருமே வாக்குரிமையின் தன்மையை உணர்ந்து வாக்களிக்கும் சக்தியைப் பெற்றிருப்பது எந்த தேசத்திலும் கிடையாது. தேசத்தை பரிபாலிக்கும் உரிமையை ஒவ்வொருவரும் பெற்றிருப்பதாக, ஜனநாயக முறையின் விவகார ரீதிப்படி ஒப்புக்கொண்டாலும், மக்களின் நிலைமையும் கொஞ்சம் அவசியமாகிறது. இதனால்தான் மைனர்கள், சித்தப்ரமை கொண்டவர்கள் முதலியவர்களுக்கு ஓட்டளிக்கும் உரிமை கொடுக்கப்படவில்லை. சில தேசங்களில் பெரிய குற்றம் புரிந்தவர்களுக்கு கூட வோட்டுரிமை கிடையாது. நமது தேசத்தில் பழய ஜாபிதாவின்படி உள்ள வாக்காளர்களைவிட, புதிய திட்டப்படி இரண்டு பங்கு வாக்காளர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று தெரிகிறது. இதனால் ஓரளவு ஜனநாய்க நோக்கம் கைகூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது

வாக்காளர்கள் எல்லோருமே இதுவரையில், தங்களுடைய உரிமையை உணர்ந்து வாக்களித்து வந்தார்கள் என்று சொல்லமுடியாது' ஏதோ ஒருவித வேகத்தினால் தள்ளப்பட்ட மக்கள், நாட்டின் விடுதலைக்காக பாடுபடும் தேசீய கட்சியை பலமாக ஆதரித்து வாக்களித்தார்கள் என்று மட்டும் சொல்லமுடியுமேதவிர, உண்மையை உணர்ந்து உணர்ச்சி மேலிட்டதால் வாக்களித்தார்கள் என்று வாதிக்க முடியாது. உண்மையை உணரவும், உரிமையைப் புரிந்துகொள்ளவும் ஒரு சந்தர்ப்பத்தை காங்கிரஸ் மஹாசபை, மக்களுக்கு அளிக்கவில்லை என்பதையும் ஒப்புக் கொள்ளவேண்டும். சுய ஆட்சியில் தனக்குரிய பங்கை மக்கள் சரியாக உணருவதுதான் வளரும் ஜனநாயகத்தின் லட்சியமாகும்.

வாக்காளர்களின் யோக்யதாம்சங்களில் முக்யமானது வயதுதான். வயதின் வரம்பை நிர்ணயித்துதான், வாக்காளர் ஜாபிதாதயாரிக்கப்படுகிறது. வாக்காளருக்கு வயது நிர்ணயம் செய்திருப்பதுபோல், அபேட்சகர்களுக்கும் வயது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அபேட்சகர்களின் வயது நிர்ணயம் சரியில்லை என்று தோன்றுகிறது. வாக்காளருக்கு ஒருவிதமாகவும், அபேட்சகருக்கு ஒருவிதமாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்தின் அடிப்படைக்கு முரணானதாகும். எவர் வாக்காளராக இருக்கிறாரோ, அவர் அபேட்சகராக நிற்க உரிமையுமுண்டு என்பதுதான் ஜனநாயக சித்தாந்தம்; ஆனால் இந்த வித்தியாசத்துக்கு ஒரு சமாதானம் சொல்லப்படுகிறது. அபேட்சகராக நிற்க அனுபவம் வேண்டும் என்பதுதான். இந்த சமாதானம் சரியாக இல்லை. அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கவேண்டியவர் அனுபவமில்லாதவராகவும், அபேட்சகர் அனுபவமுள்ளவராக கருதப்படுவது சரியாகாது. மேலும் ஒரு சில வருட வித்தியாசங்களில், பெரிய அனுபவத்தை பெற்றுவிடமுடியாது என்பதையும் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆகையால் இருவருக்கும் ஒரே வயதாக நிர்ணயிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

அபேட்சகராக நிற்பதற்கு வயது நிர்ணயம் செய்வதுபோல், இவ்வளவு வயதுக்கு மேற்பட்டவர்கள் அபேட்சகர்களாக நிற்கக்கூடாது என்றும் நிர்ணயம் செய்யவேண்டும். சுறுசுறுப்பான ஒரு அபேட்சகருக்கு அவசியமான புத்திக்கூர்மை, தேகதிடம், உழைப்புத்திறன், ஊக்கம், தைரியம், முதலியவைகளை சாதாரணமாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் காண்பது சிறிது கடினமாகத்தான் தோன்றுகிறது. இந்த வயது வரம்பை மீறியவர்கள் சட்டசபை அங்கத்தினர் மந்திரி, ராஜதந்திரி போன்றவர்களாகவோ, அல்லது தலைவர்களாகவோ வருவார்களேயானால், அப்பதவிகளுக்கும், அப்பதவியை வகிப்பவர்களுமிருக்கவேண்டிய நற்குணங்களுக்குப் பதிலாக பொறுமையும், ஆத்திரமும் தலை தூக்குவதை பார்க்க முடியும். எதிலும் நேர்முகமாக பிரவேசிக்க இஷ்டமில்லாமல் சூழ்ச்சி, சதி, முதலியவற்றின் மூலமாகப் பிரவேசிக்கும்படி நேரிடலாம். இத்தகைய காரணங்களினால்தான் இப்புதிய முறையை கையாளவேண்டுமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள் இந்த வயது வரம்புக்கு மேற்பட்ட சிலர் இத்தகைய குணதோஷங்களில்லாதவராக இருக்கலாம். ஆனால் அத்தகையவர்கள் காலம் சென்ற காந்தியடிகளைப்போல், ஆலோசனை கூறுபவர்களாக இருக்கும் பட்சத்தில்

வளரும் ஜனநாயகம், வெகு சீக்கிரத்தில் முன்னேறிவிடும்.

வளரும் ஜனநாயகத்தில், வாக்காளர்கள் கல்வியறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது சித்தாந்தம். நமது தேசத்தில் முக்கால் பங்கினர் எழுத்தறிவில்லாமலும் பொது விஷயங்களையறிய முடியாத நிலைமையில், கிராமங்களில் வாழ்ந்து வருகிறார்கள். எழுத்தறிவு இல்லையென்றாலும், அறிவிற்கும், அநுபவத்திற்கும் உட்பட்ட விஷயங்களில் வாக்களிக்கும் திறமை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் எழுத்தறிவில்லாதது, அறிவையும் அதனைப் பெறுவதற்கான சாதனங்களையும், சக்தியையும் அடைவதில் குதக்கிட்டுவிடுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். வாக்களிப்பதற்கு அதிகமான கல்வியறிவு தேவையில்லையென்பது ஓரளவு உண்மையாயிருப்பினும், ஒரு தேசத்தில் ஜனநாயக அரசு தொடங்கும்போது இப்பிரச்னை மிகவும் சிக்கலாக அமைந்து பல காரியங்களுக்கு தடையாகவும் இருக்கிறது.

அரசாங்கத்தின் கொள்கைகள், செய்கைகள், நிர்வாக விபரங்கள், இவைகளுக்கு மேலாக, பொருளாதார விஷயம், சர்வதேச உறவு போன்றவைகள், வாக்காளர்கள் புரிந்துகொள்ள முடியாத சிக்கல் நிறைந்த விஷயங்களாய்விட்டன. இம்மாதிரியான விஷயங்களைப் பற்றி பத்திரிகைகளின் மூலமாகவும் சரியாக அறிந்துகொள்ள முடிவதில்லை. பெரிய தலைவர்களிடம் இதைப்பற்றி பிரஸ்தாபித்தால், சாதாரண மக்கள் இதைப் புரிந்துகொண்டுதான் என்ன செய்வது. இத்தகைய விவகாரங்கள் அரசாங்கத்தின் தனிப்பொறுப்பிலிருப்பதால் பொதுமக்களுக்கு நன்மையேற்படுவதுடன் நிர்வாகமும் சிரமமில்லாமல் நடைபெறுகின்றன என்று சமாதானம் சொல்லுகிறார்கள்; இந்த சமாதானத்தை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளமுடியும் என்று வாசகர்களே ஊகித்துக்கொண்டால், ஜனநாயகம் வளர வேறு வழியைத் தேடவேண்டியதில்லை என்று கூறலாம்.

பொதுமக்களின் கல்வியறிவை விருத்தி செய்யாமலும், இதைப் பொருட்படுத்தாமலும், வாக்குரிமையை மட்டும் விஸ்தரிப்பதனால், ஒரு கட்சியாளர் தங்கள் கொள்கைகளை வாய்மொழியாகவே இஷ்டம்போல் பிரசாரம் செய்து பயன் பெற முடியுமென்பதை மறுக்கமுடியாது. இந்த கட்சியாளர்களின் அரசியல் வேட்டையை நசுக்கவே, வாக்காளர்களுக்கு எழுத்தறிவை ஒரு யோக்கியதாம்சமாக அறிஞர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். இதிலிருந்து நாம் பின்னோக்கிச் சென்றால், ஜனநாயகம் முன்னேற முடியாது என்பது உறுதி.

வரும் பொதுத்தேர்தல் காலத்திற்குள் நமது தேசத்தில், எல்லோரும் கல்வியறிவுள்ளவர்களாக ஆக முடியாது என்பது உண்மையாகையால், பொதுமக்களின் வாக்குரிமைகளை தவறான முறையில் உபயோகப்படுத்தத் தூண்டும் நடவடிக்கைகளை அரசாங்கம் தடை செய்யவேண்டும்; மேனாடுகளில் இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் பதவிக்கு ஆசைப்படாத ஒரு கோஷ்டியார், பொதுமக்களுக்கு உண்மையை எடுத்துரைப்பார்கள். இவர்களுக்கு பலவிதமான துன்பங்கள் ஏற்படும். அதையும் பொருட்படுத்தாமல் உழைப்பார்கள்; இப்மாதிரி உழைப்பவர்கள் "ஜனநாயக கோஷ்டியார்" என்று அழைக்கப்படுவார்கள். நமது தேசத்தில் இம்மாதிரியான கோஷ்டியார் இப்பொழுது மிகவும் அவசியம்; பொதுவாகவே வளரும் ஜனநாயகத்துக்கு இம்மாதிரியான ஊழியர்கள் எக்காலத்திலும் தேவைதான். இவர்களின் மூலமாக ஜனநாயக லட்சியம் நிறைவேறும் என்ற மேனாட்டு நம்பிக்கையை நாமும் கைக்கொள்ளவேண்டும்.

---


**'ஆஸாத்'**

பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
**அப்துல் சலாம்**, ஈரோடு.

---


**Namath Watch Company,**
37-38, RATTAN BAZAAR,
P. T. MADRAS.



**"எலிடா"**
ரூபா 95/-
ரோல்டு கோல்டு 7¾ சைஸ் ஆப்டிக் கிளாஸ் கர்வட் ஷேப்
ரோமர், பியர்பு, ரிக்கார்டு,
இன்னும் அநேக ரகங்கள் சப்ளை செய்யப்படும்
நேர்த்தியான லேடி கடியாரங்களும் கிடைக்கும்.

## 'ஆஸாத்' அன்பரின் வேண்டுகோள்.

**"பல விஷயங்கள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் அவை உங்களுக்கு நன்மை பயக்கக்கூடியனவாக இருக்கும்"—திரு குர்-ஆன்.**

ஏராளமான நஷ்டத்தையும் சகித்துக்கொண்டு ஆஸாத் சேவை செய்துவருகின்றது. அதன் சேவை மஹத்தானது. எவ்வகுப்பினராயினும் இந்தியர்களாகிய ஒவ்வொருவரும் ஆஸாதின் சேவையை ஆதரிக்கவேண்டியதவசியம். வெள்ளையர்களும்அவர்களுடையஏஜண்டுகளும் சிருஷ்டித்துச் சென்ற சூழ்நிலையை சீக்கிரமே மாற்றி நாட்டின் அமைதி சமாதானத்தைக் காப்பாற்றி ஒற்றுமையை நிலைநாட்டி எதிர்காலத்தில்ஏற்படக்கூடிய எந்தநிலைமையையும்சமாளிக்கஇந்தியர்களைதயார்செய்யவேண்டியமுக்கியவேலை இன்னும்முடிவடையவில்லை.

தென்னாட்டில் ஆஸாதுக்கு தனிப்பட்டமுக்கியத்துவம் உண்டு. லீக் பிரசாரத்தின் விளைவாக பிரிந்திருந்த ஹிந்து முஸ்லிம் உள்ளங்களை ஆஸாதின் புரட்சிகரமான போக்கால் பிணைத்துவருகின்றது. நாட்டின் இரண்டு பெரிய சமூகங்களிடையே லீக் எழுப்பியிருந்த வெறுப்புக் கோட்டைகளை தகர்த்து தரைமட்டமாக்கி ஒற்றுமையின் புனிதமான உன்னத மாளிகையை ஆஸாத் நிர்மாணித்து வருகின்றது. மிஸ்டர் ஜின்னாவின் பொய் பிரசாரவலையில் சிக்கியிருந்த முஸ்லிம்களை மீட்டு மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையின் கீழ் ஒன்று திரட்டும் வேலையை வெற்றிகரமாகச் செய்கின்றது. தென்னாட்டின் அமைதிக்கு ஆஸாத் அவசியம். அதன் வளர்ச்சிக்காக முயற்சிப்பது நம் கடமை. ஆஸாதுக்கு உதவுவதை தேசீய சேவையாகப் பாவித்து சாத்தியமான அளவுக்கு ஹிந்து சகோதரர்கள் உதவியிருக்கின்றனர். உதவிசெய்தும் வருகின்றனர். சென்னை மாகாண · காங்கிரஸ் முஸ்லிம்களில் பிரபலஸ்தரான ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிபைப்போன்ற ஒரு சிலரைத் தவிர ஆஸாத் போன்றதொரு பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம் பொதுமக்கள் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இம்மாதிரியான பொது வேலைகளுக்கு ஒருசிலரின் ஆதரவுமட்டுபோதாது முஸ்லிம் சகோதரர்கள் ஆஸாதை ஆதரிக்க முன்வரவேண்டும். நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தீங்கிழைக்கும் வகையில் வகுப்புப்பிரசாரம்செய்யும் பத்திரிகைகளை ஆதரிப்பதால் நாட்டிற்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ நன்மையில்லை. அவ்விதப்பிரசாரத்தின் பலனை அனுபவித்தாய்விட்டது. மாறுதலடைந்திருக்கும் சூழ்நிலையின் தன்மையை தெரிந்துகொண்டு ஆஸாத் போன்ற பத்திரிகையின் அவசியத்தை முஸ்லிம்கள் உணரவேண்டும். முடிவில் சாத்தியமான சகல துறைகளிலும் ஆஸாதை ஆதரிக்குமாறு ஹிந்து முஸ்லிம் சகோதரர்களை கேட்டுககொள்ளுகிறேன்.

**"ஆஸாத்" சமீபத்தில் தன் வரவு செலவு கணக்கை வெளியிடப் போவதாகத் தெரிகிறது. அதில் முஸ்லிம் நன்கொடையாளர்களுடைய பெயர்களும் உயர்ந்த ஸ்தானத்தில் இடம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.**

K. M. ஷரீப்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.